# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044305

1. District மாவட்டம் : கரூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/AC/23 Date: நாள் 07.03.2023

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: ACT 1988 AS AMENDED Sections பிரிவுகள்: 7(a)
   (iii) Act சட்டம்: IN 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.02.23 Date to : நாள் வரை 13.45 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 06.03.23 Time to : நேரம் வரை 13.30 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.03.23 Time : நேரம் 16.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.03.23 Time : நேரம் 16.45 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 12 கி.மீ கிழக்கு
   சுமார் 5 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 1, கருவங்காடு சணப்பிரட்டி தெற்கு, கரூர் [ஜோதி மனையின் 43 வீடு]
   2, [illegible] பிரிவு ரோடு அருகில் கரூர் [illegible]
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. மாணிக்கவாசகம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. தேக்கன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1983 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கூலி வேலை (g) Address : முகவரி 30/3, தில்லைநகர், 1st CROSS S. வெள்ளாளப்பட்டி, கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ரவிச்சந்திரன் [பில் கலெக்டர்] வருவாய் உதவியாளர், கரூர் மாநகராட்சி கரூர். மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கணினியில் தட்டச்சு செய்து தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

7/3/23 7/03/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07. 03. 2023. AT. 1000 HRS.

Name: பெயர் K. சாமிநாதன், ..............................
Rank: நிலை ....................No. எண் ........
காவல் ஆய்வாளர்,
உ.த.க. பிரிவு
[illegible].

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.01/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் சாமிநாதன் ஆகிய நான் 06.03.2023 ஆம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது திரு.T.மாணிக்கவாசகம், S/o.P.தேக்கன், 30/3, தில்லை நகர், S.வெள்ளாளபட்டி அஞ்சல், கரூர் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்- T.மாணிக்கவாசகம், S/o.P.தேக்கன், 30/3, தில்லை நகர், S.வெள்ளாளபட்டி அஞ்சல், கரூர். பெறுநர்- உயர்திரு.போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கரூர் மாவட்டம். அய்யா, நான் கரூர் தொழிற்பேட்டை பகுதியில் 30/3, தில்லை நகர் என்ற முகவரியில் வாடகை வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் ஐடிஐ வரை படித்துவிட்டு கரூர் S.வெள்ளாளபட்டி பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் லேபராக பணிபுரிந்து வருகிறேன். கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி தெற்கு தற்போது 14-வது வார்டில் வரும் (முன்பு 35-வது வார்டு) கருவங்காடு என்ற பகுதியில் எனது மனைவி திருமதி.கன்னியம்மாள் பெயரில் கடந்த 30.10.2017 அன்று சணப்பிரட்டி கிராம சர்வே எண் 1266/டி என்ற மனைப்பிரிவில் 1ஏ தென்புரம் கீழ்பகுதி மற்றும் 1பி கீழ்பகுதியிலும் ஒரே அடைப்பாக உள்ள 1558 சதுரடி கொண்ட மனையை S.வெள்ளாளபட்டியைச் சேர்ந்த நாச்சிமுத்து கவுண்டரின் மகன் சரவணன் என்பவரிடமிருந்து 2017-ல் கிரையம் பெற்றோம்.

அதனைக் தொடர்ந்து அந்த இடத்தில் வீடுகட்ட முடிவுசெய்து பட்டா மாறுதல் பெற்று Vacant land Tax-ம் கரூர் மாநகராட்சியில் முறைப்படி கட்டினோம். பின்னர் கட்டிட அனுமதியை 10.1.22 அன்று முறைப்படி பெற்று சிவில் இன்ஜினியர் மூலம் வீடு கட்டும் பணியை 95 சதவீதம் முடித்துவிட்டோம். இந்நிலையில் கடந்த 1.2.23-ம் தேதி இந்த வீட்டிற்கு வீட்டு வரி நிர்ணயம் செய்ய விண்ணப்பத்தினை நான் பூர்த்தி செய்து எனது மனைவியிடம் கையொப்பம் பெற்று கரூர் மாநகராட்சி அலுவலகத்தில் அங்கிருந்தவர்கள் சொன்னபடி தபால் பெட்டியில் போட்டேன். மறுநாள் கரூர் மாநகராட்சியில் இருந்து என்னுடைய 9751323002 எண்ணிற்கு கால் செய்து ஆபிஸ் வரசொன்னார்கள். நான் அன்றே கரூர் மாநகராட்சி ஆபிஸ் சென்று விசாரித்து அங்கிருந்த ஒரு திருநங்கை அவர்களை சந்தித்தேன். அவர் அப்போது என்னிடம், விண்ணபத்தை பணம் கட்டின பின்பு தான் பெட்டியில் போடவேண்டும் என்று சொல்லி, உங்க ஏரியா பில் கலெக்டரிடம் உங்க பைலை கொடுக்கிறேன், அவங்க உங்களை கூப்பிடுவாங்க என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

நான் 8.2.23 அன்று வழக்கம் போல் வேலைக்கு சென்று விட்டு வந்து பார்த்தபோது, 9715163745 என்ற எண்ணிலிருந்து எனக்கு 3 மிஸ்டு கால்கள் வந்திருந்தது. அதனால் நான் என்னுடைய 9751323002 எண்ணிலிருந்து அந்த எண்ணிற்கு மாலையில்

7/3/23

தொடர்புகொண்டபோது, அவர் 14-வது வார்டு பில் கலெக்டர் ரவிச்சந்திரன் என்று சொன்னார். அப்போது அவர் என் மனைவி பெயரில் கொடுத்த வீட்டுவரி விண்ணப்பம் தொடர்பாக 15-வது வார்டு பார்க்கிற சரவணன் அவர்களை பாருங்க என்று சொல்லி வைத்துவிட்டார்.

அதே போல் நான் 13.2.23 அன்று திங்கள் கிழமை கரூர் மாநகராட்சி அலுவலகம் சென்று 15-வது வார்டு பில் கலெக்டர் சரவணன் அவர்களை பார்த்தேன். அவர் எங்களுடைய வீடு 14-வது வார்டுல தான் வருது நீங்க போய் ரவிச்சந்தினையே பாருங்கள் என்று சொல்லி அங்கேயே இருக்க சொன்னார். சிறிது நேரத்தில் 14-வது வார்டு பில் கலெக்டர் ரவிச்சந்திரனும் அங்கு வந்துவிட்டார். அவர்கள் இருவரும் ஆலோசித்து பிறகு கேஷ் கவுண்டரில் வார்டு பற்றிய விபரத்தை மாற்றிய பிறகு என்னிடம் பில்கலக்டர் ரவிச்சந்திரன் அவர்கள் மறுபடியும் கூப்பிடுவதாக சொல்லி அனுப்பிவிட்டார்.

அதன்பின்னர் 17.2.23 அன்று மதியம் வீட்டை அளக்க வருவதாக ரவிச்சந்திரன் அவர்கள் என்னை செல்போனில் கூப்பிட்டு அங்கு வரச்சொன்னார். நானும் அங்கு போனேன். அன்றைய தினம் மதியம் எங்கள் வீட்டை ரவிச்சந்திரன் அவர்களும் அவருடன் உதவிக்கு வந்தவரும் எனது இடத்தை அளந்தார்கள். பின்னர் பில் கலக்டர் ரவிச்சந்திரன் அவர்கள் சுமார் 1 ¾ மணிக்கு என்னிடம் வீட்டு வரியை குறைச்சு போட்டு குயிக்காக வேலையை முடிச்சிறேன் ஒரு 25 ஆயிரம் எனக்கு கொடுங்கள் என்று கேட்டார். நான் அப்போது என்னிடம் பணமில்லையென்று சொல்லிவிட்டேன். பிறகு அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் பில் கலக்டர் ரவிச்சந்திரன் அவர்கள் என்னை செல்போனில் மீண்டும் கூப்பிட்டு மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய மெசர்மென்ட் பீஸ் கட்டாம இருக்கீங்க, அத முதலில் கட்டுங்க, பீஸ் கட்ட வரும்போது என்கிட்ட போன் செய்து கேட்டுட்டு வாங்கனு சொன்னார். அதற்காக அன்று மாலை நான் பில்கலக்டரை செல்போனில் கூப்பிட்டபோது அவர் 20.2.23 திங்கள் கிழமை வரசொன்னார். அதேபோல் 20.2.23 மாலை கரூர் மாநகராட்சி அலுவலகம் போனபோது பில் கலக்டர் ரவிச்சந்திரன் அவர்கள் என்னிடம் ரூ.500/- பணத்தை வாங்கிக்கொண்டு அலுவலகத்தினுள் போய்விட்டு வந்து மெசர்மென்ட் பீஸ் மற்றும் கொடிநாள் பணம் கட்டிவிட்டதாக சொன்னார்.

நான் வரி எப்போது போடுவீர்கள் என்று கேட்டேன். அவர் கூட்டமாக உள்ளது அதனால் மறுபடியும் கூப்பிடுகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். இன்று 6.3.23 காலை சுமார் 9.10 மணியளவில் பில் கலெக்டர் ரவிச்சந்திரன் 9080742430 என்ற எண்ணிலிருந்து என்னுடைய 9751323002 என்ற எண்ணிற்கு கூப்பிட்டு காலை 10 ¼ மணிவாக்கில் இதே செல்போனுக்கு கூப்பிட்டுவிட்டு ஆபிஸ்க்கு வந்து பார்க்கச் சொன்னார். நான் என் வேலைகளை முடித்துவிட்டு மதியம் சுமார் 1.10 மணிக்கு கரூர் பஸ்டாண்டு அருகிலிருந்து அதே எண்ணிற்கு கூப்பிடடேன். அப்போது பில்கலக்டர் ரவிச்சந்திரன் நீங்க எங்க

7/3/23

இருக்கீங்கனு கேட்டுவிட்டு பஸ் ஸ்டாண்ட் தென்புறமுள்ள தலப்பாகட்டி பிரியாணி முன்பாக வரசொன்னார்.

நான் அங்கு சென்றபோது சுமார் 1 ½ மணியளவில் பில்கலக்டர் ரவிச்சந்திரனும், அவரது உதவியாளரும் அங்கு வந்தார்கள். பில்கலக்டர் என்னைப் பார்த்து விட்டு இங்க சுற்றிலும் கேமரா இருக்குனு சொல்லி வேறபக்கம் போலாம்னு சொல்லிட்டு பெரிஸ் பிளாஸா லாட்ஜ் அருகில் உள்ள சந்திற்குள் கூட்டிச்சென்றார். அங்கு சென்றவுடன் பில்கலக்டர் என்னிடம் மாநகராட்சினு வரி போட்டா உனக்கு அதிகமா வரும், அதனால பஞ்சாயத்துனே வரி போட்டு உடனே இன்னிக்கே ஆர்டர் வாங்கி தறேன் நான் கேட்ட 25 ஆயிரத்தை கொடு என்றார். நான் பின்னாடி ஏதாவது பிரச்சினை வரும் நீங்க இன்னைக்கு சொல்லிட்டு பீஸ் குறைச்சு போட்டுடுவீங்க நாளைக்கு நான் தான் பிரச்சனைய சந்திக்கனும் என்று சொன்னேன். அதற்கு அவர் எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன் பணத்தை கொடு என்று கேட்டார். நான் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது என்று சொன்னதுக்கு அவர் 20 ஆயிரம் கொடுக்காம என்னால வேலையை செய்ய முடியாது பணத்தை ரெடிபண்ணிக்கிட்டு சீக்கிரமா 9080742430 செல்போனில் கூப்பிடுங்க என்று சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு பில்கலக்டர் ரவிச்சந்திரன் அவர்கள் கேட்ட 20 ஆயிரம் பணம் லஞ்சமாக அவருக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- XXXXXXXXXX (T.மாணிக்கவாசகம்) 06/03/2023.

Sir, Received the complaint on 06.03.2023 at about 16.30 hrs,. a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.01/AC/2023 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 07.00 hrs on 07.03.2023. Sd/-(xxxxxxxx) 07.03.2023. K.Saminathan, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.T.Manickavasagam, S/o.P.Thekkan, Door No.30/3, Thillai Nagar, S.Vellalapatty(Po), Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

7/3/23

**(K.Saminathan)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

தமிழ்நாடு காவல்துறை
வாய்மையே வெல்லும்